# தூதன்

தூதன்-24 அக்டோபர் 2015 தூது-09

"நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்."
சங்கீதம் 116:14

## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| Harvest Festival Weekly Food Sales | 09 |
| செயலர் மடல் | 10 |
| ஆலோசனை சங்கமும் ஆலோசியாத கேள்வியும் | 12 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 13 |
| விழித்திரு | 14 |
| வேதத்தில் பூக்கள் | 15 |
| ஆராதனை பாடல்கள் | 17 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 20 |
| தெரிந்து கொள்வோம் | 22 |
| Great Warriors for Christ | 24 |
| வேதவினா போட்டி | 26 |
| Health Tips | 28 |
| Birthday Celebrants | 31 |
| Wedding Anniversary Celebrants | 34 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae

## கடவுள் நம் தந்தை - திருச்சபை நம் தாய்

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன்விசுவாசிகளே,

திருச்சபை கிறிஸ்துவின் மணவாட்டி, திருவுடல் நாம் அதன் உறுப்புக்கள். கிறிஸ்துவாகிய தலையின் ஆணைக்குக் கீழ்ப்பட்டவர்கள். கிறிஸ்துவால், அப்போஸ்தலர் வழியே, திருமறைப் பாரம்பரியத்தில் உருவாக்கப்பட்ட கண்காணிகள்(Bishops), மூப்பர்கள்(Presbyters), உதவியாளர்கள் (Deacons) போன்ற ஆதித்திருச்சபையின் வழியில் உருவான நமது தாய்த் திருச்சபையாம் தென்னிந்தியத் திருச்சபைக்கு வயது 68. 1947-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் நாள் உருவானது தென்னிந்தியத் திருச்சபை. இந்திய நாட்டின் விடுதலைக்குப் பின்பு ஆங்கிலேய சபையின் தொடர்ச்சியாக இப்பெரிய ஐக்கிய சபை உருவானது. இதில் நான்கு பாரம்பரிய சீர்திருத்தச் சபைகள் இணைந்துள்ளன. சபையாளுகை (Congregational), மூப்பராளுகை (Presbyterian), மெதடிஸ்டு (Methodist) மற்றும் ஆங்கிலேய சபை (Anglican).

### கருப்பொருள் (Motto)

“அவர்களெல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக” என்ற யோவான் 17:21-ல் மகா பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவின் இறைவேண்டலின் அடிப்படையில் உருவானதே நமது ஐக்கிய சபையான தென்னிந்தியத் திருச்சபை. இது “இரண்டாம் பெந்தெகொஸ்தே” (Second Pentecost) என்று அழைக்கப்படுகிறது. திரித்துவக் கடவுளின் ஒன்றிப்பின் முன்மாதிரியைப் பின்பற்றி உருவான சபைகளின் ஒன்றிப்புதான் தென்னிந்தியத் திருச்சபை.

### இணைப்பு வரலாறு (History of Union)

கி.பி. 16-வது நூற்றாண்டிலேயே பேரரசி முதலாம் எலிசபெத் காலத்தில் இந்தியாவில் (பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, வட இலங்கை உட்பட்ட) ஆங்கிலேய சபை உருவானது. 1814-ல் கல்கத்தா பேராயமும், 1835-ல் சென்னைப் பேராயமும், 1837-ல் மும்பைப் பேராயமும் உருவாயின. ‘முதல் இந்தியச் சுதந்திரப்போர்’ என்னும் சிப்பாய் கலகம் 1857-ல் விடுதலை இயக்கங்களை ஒன்றிணைத்தபோது, நற்செய்திப்பணி இயக்கங்கள் சீர்திருத்தச் சபைகளை (Reformed churches) ஒன்றிணைக்க முயன்றன. அதின்படி 1908-ம் ஆண்டில் சபையாளுகை மற்றும் மூப்பராளுகை சபைகள் ஒன்றிணைந்து தென்னிந்திய ஐக்கிய சபை (SIUC - South India United Church) உருவானது. 1910-ம் ஆண்டில் எடின்பரோ நகரில் நடைபெற்ற மிஷினெரி மாநாட்டிலும், அதைத் தொடர்ந்து 1919-ம் ஆண்டு தரங்கம்பாடியில் நடைபெற்ற மாநாட்டிலும் லுத்தரன், மெதடிஸ்டு,

SIUC மற்றும் ஆங்கிலேய சபை ஆயர்கள், பேராயர் V.S.அசரியா அவர்கள் தலைமையில் சபை ஒன்றிப்பு முயற்சியாக “தரங்கம்பாடி அறிக்கை” (Tranquebar Manifesto) ஒன்றை வெளியிட்டனர். லுத்தரன் சபைகள் கொள்கைகள் மற்றும் சொத்துக்கள் பராமரிப்பின் அடிப்படையில் இணைய இயலவில்லை. ஆனால் 1927-ம் ஆண்டு இந்தியா, பர்மா, சிலோன், பாகிஸ்தானிலுள்ள ஆங்கிலேய சபைகளும், ஆங்கிலேய மெதடிஸ்டு சபையும், SIUC-ம் இணைந்து லாம்பெத் நகரில் நடைபெற்ற மாமன்றத்தில் 4 அடிப்படைகளை சபை ஒன்றிப்பின் அடிப்படையாக வெளியிட்டன. இவைகளை ஏற்றுக்கொள்ள 20 ஆண்டுகள் பிடித்தன. 1941-ல் மெதடிஸ்டு சபையும், 1945-ல் ஆங்கிலேய சபையும் இவைகளை ஏற்றுக்கொண்டன. 1947-ம் ஆண்டு செப்டம்பர் 27-ம் நாள் (27-09-1947) தென்னிந்தியத் திருச்சபை நான்கு சபைகளின் ஐக்கிய சபையாக சென்னை தூய ஜார்ஜ் கதீட்ரல் பேராலயத்தில் மலர்ந்தது.

### 4 அடிப்படைகள் (Four Basis)

1. பழைய, புதிய ஏற்பாடுகளைக் கொண்ட திருமறை (OT,NT Bible)
2. அப்போஸ்தலர், நிசேயா விசுவாசப்பிரமாணம் (Apostle & Nicene creeds)
3. இயேசுவின் வாழ்வுடன் இணைந்த தூய திருமுழுக்கு, தூய திருவிருந்து என்னும் சாக்கிரமெந்துகள் (Holy Baptism & Holy Eucharist as sacraments)
4. பேராயராளுகை முறை (Episcopal Order)

### சின்னம் (Logo) :

தென்னிந்தியத் திருச்சபை சின்னத்திலுள்ள சிலுவை அடையாளம் தியாகம், சமத்துவம், இறையாட்சி விரிவாக்கத்தையும், தாமரை மலர் உலகத்தால் கறைபடாத வாழ்வையும், நெருப்புத்தனல் ஆவியில் அனலுள்ள தன்மையையும் சுட்டுகின்றன. மொழி, இனம், இடம், நிறம், பொருளாதார வேற்றுமைகளைக் கடந்து ஒன்றாயிருக்கும்படியாக உருவாக்கப்பட்ட நம் ஐக்கியத் திருச்சபையைப் பாதுகாத்து, பராமரித்து, மதித்து நடப்பதும், இதின் தலைவராம் கிறிஸ்துவின் வாழ்வு, போதனை நெறியில் நடப்பதும், நமது அடிப்படைச் செயல்பாடாகும்.

### ஆளுகை முறை (Administration):

தென்னிந்தியத் திருச்சபையின் பிரதம பேராயர் முதன்மையானவர். தற்பொழுது பேரருட் பெருந்திரு முனைவர்.G.தெய்வாசீர்வாதம் அவர்கள் இப்பொறுப்பிலிருந்து வழிநடத்துகிறார்கள். தற்போது கொச்சி, கொல்லம், மலபார் பேராயங்களையும் இணைத்து 24 பேராயங்களைக் கொண்ட தென்னிந்தியத் திருச்சபை மாமன்றத்தின் (Synod) தலைமையில் இயங்கி வருகிறது.

இம்மாபெரும் சபையில் 15,000 திருச்சபைகளும், 4 மில்லியன் உறுப்பினர்களும், அவர்களில் பெரும்பாலோர் இந்தியாவிலும் மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, பெஹ்ரைன், குவைத், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு நாடுகளிலும் சான்று பகர்கின்றனர். இது தவிர யாழ்ப்பாணம், போபால், பூனா, புதுடில்லி, கொல்கத்தா, பிலாய், மும்பாய், பெங்களூர் நகரங்களிலும் தென்னிந்தியத் திருச்சபை வேரூன்றியுள்ளது. இச்சபை ஐக்கியத்தில் ஏறக்குறைய 2300 பள்ளிகளும், 150 கல்லூரிகளும், 104 மருத்துவமனைகளும், 50,000 ஏழை எளிய மாணவ மாணவியர் வாழ்வை உயர்த்தும் 600 விடுதிகளும் உள்ளன. சமூக, பொருளாதார, அரசியல் தளங்களிலும் புரட்சித்தடம் பதித்து வீறுநடைபோடும், சாட்சியுள்ள சபை நம் தாய்த் திருச்சபையான தென்னிந்தியத் திருச்சபையாகும். இதன் தலைவராம் ஆண்டவருக்கே எல்லா மேன்மையும், மகிமையும், கனமும் உண்டாவதாக.

இறைப்பணியில் ஆயர்
அருள்திரு. S. கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

# ஆயரம்மா மடல்

## பெண் என்னும் குணவதி (நீதி. 31)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அனைவருக்கும் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்றாடம் நம்மை வழிநடத்தும் கடவுளைத் தோத்தரிப்போம். அவர் நம்மை அனுதினமும் பாதுகாத்து, பராமரித்து, வாழ வைத்து, உணர வைத்து, ஆச்சரியமாய் நடத்துகிறார். அவருக்கு எப்போதும் நன்றியுடையவர்களாயிருப்போம். Our God is the God of love, guidance, protection and life giving source. கடந்த மாதம் Al Ain திருக்குடும்பங்களில் ஒன்றில் ஏற்பட்ட வாகன விபத்தில் இழப்பைச் சந்தித்தவர்களுக்கு ஆறுதலையும், இழந்துபோன ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதலையும், காயப்பட்டோருக்கு விடுதலையையும் ஆண்டவர் தந்திட ஜெபிப்போம்.

கடந்த மாதம் ஏவாள் என்கிற பெண் வாழ்வுள்ளோருக்கெல்லாம் தாய் என்றும், ஆசீர்வாதத்தின் அடையாளம் என்றும் பார்த்தோம். அதுபோல திருச்சபை என்னும் நமது தாய்க்கும் வயது 68. அவள் வழியாக அநேக ஆசீர்வதங்களை நாம் பெற்றிருக்கிறோம். Ecclesia என்று சொல்லப்படும் திருச்சபைப்பதம் ஒரு பெண்பால் பதமாகும். அனைவரையும் உள்ளடக்கிய திருக்கூட்டமே திருச்சபை. பெண் என்பவள் ஒரு குணவதி, குடும்பத்தையும், திருச்சபையையும், சமுதாயத்தையும் கட்டிக் காப்பவள்.

குணசாலியான பெண் எப்படிப்பட்டவராயிருக்க வேண்டும் என நீதிமொழிகள் 31-ஆம் அத்தியாயத்தில் பார்க்கிறோம். நான்கு அடிப்படையில் குணவதியான பெண்ணை நோக்கலாம்.

### 1. மதிப்புள்ளவள் (Valuable woman)

பெண் மதிப்பு மிக்கவளாக குடும்பத்திலே விளங்குகிறாள். (வசனம் 10). அவளுடைய விலை உலகின் எந்தப் பொருளையும் விட உயர்ந்தது. (வசனம் 10). கணவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவள். (வசனம் 11). உயிரோடிருக்குமட்டும் நன்மையை மட்டுமே செய்கிறவள். (வசனம் 11). இப்படிப்பட்ட பெண்கள் மதிப்பும், உயர்வும் கொண்ட சிறப்பு மிக்கவர்களாகக் கருதப்படுகின்றனர்.

### 2. கடின உழைப்புள்ளவள் (Hard working woman)

உற்சாகத்தோடே நாள்முழுவதும் வேலை செய்கிறவள். (வசனம் 13). தன் ஆகாரத்தை குடும்பம் முழுவதிற்கும் கொண்டு வருபவள். (வசனம் 14). விலையுயர்ந்த உடைகளை உருவாக்கி, வணிகம் செய்து (வசனம் 24). இரவில் விளக்கணையாமல் கடினமாய் உழைக்கிறவள் பெண்.

### 3. ஞானமுள்ளவள் (Wise woman)

வசனம் 16-18-ன்படி குடும்பப் பெண் எதைச் செய்தாலும் (வயலை வாங்கினாலும்) நின்று ஞானமாய் விசாரித்துச் செயல்படுபவள். தன்னை எச்சூழலிலும் பலப்படுத்திக்கொண்டு, வீட்டிற்கு எப்பொழுதும் பயனுள்ள பாத்திரமாயிருக்கிறவள். (வசனம் 17,18). தன் வாயை ஞானம் விளங்கும்படியாகத் திறக்கிறவள். (வசனம் 26)

### 4. தரமுள்ளவள் (Qualitative woman)

ஏழை எளியவர்க்கு அவர்தம் தேவைக்கு இரங்குகிறாள் பெண். (வசனம் 20). தன் கணவருக்கு கனத்தைக் கொண்டுவரும் குலவிளக்கு பெண். (வசனம் 23). எதிர்காலத்தைப் பற்றியும், திட்டமிட்டு அது மகிழ்ச்சியாக இருக்க நினைத்து அர்ப்பணிப்பவளும் பெண்ணே. (வசனம் 25).

இப்படிப்பட்ட பெண்கள் குணவதியாக இருப்பார்கள் என்று அவர்தம் கணவர் சான்று தருவர். பெண்கள் குடும்பங்களில் இப்பெயரைக் கொண்டுவரவும், ஆடவர்கள் தம் பெண்டிரை கனப்படுத்தவும் முயற்சிப்போம்.

திருமதி. தீபா கிறிஸ்தோபர்.
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி.

# உதவி போதகர் மடல்

அனைத்தையும் செய்து முடிக்கும் ஆற்றல் நிறைந்த கடவுளின் திருப்பெயரால் இறைமக்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். அனைத்து வளங்களும் நிரம்பி வழிகின்ற ஆசீர்வாதமான நாட்களாய் அக்டோபர் மாதம் அமைவதாக.

### திருமறை ஆய்வு - ரோமர் 11-ம் அதிகாரம்

"தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப் படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!" (ரோ. 11:33)

இஸ்ரவேலரும், பிற இனத்தவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற அப்போஸ்தலனாகிய பவுலின் வாஞ்சையையும், அதற்காக அவர் எடுக்கின்ற முயற்சிகளையும், அதற்குத் தேவையான அவரது போதனைகளையும், இவ்வதிகாரம் முழுவதும் காணலாம். இஸ்ரவேலர் மற்றும் நம்மைக் குறித்த கடவுளின் திட்டமும் அதுவே (God's plan for the Jew and for us) என்பது பவுலடியாரின் கருத்து. அத்திட்டத்தை நிறைவேற்ற கடவுள் வெளிப்படுத்தும் 3 பண்புகளைக் குறிப்பிடுகிறார்.

#### 1. கடவுளின் கிருபை (The grace of God)

ரோமர் 11:1-10 வரையுள்ள வசனங்களில் கடவுளின் கிருபை இரண்டு விதங்களில் செயல்படுவதைக் கோடிட்டுக் காண்பிக்கின்றார்.

- கடவுளின் காக்கும் கிருபை (God's protecting grace)
- கடவுளின் தெரிந்தெடுக்கும் கிருபை (God's selecting grace)

இதனை விளக்க 1 இராஜாக்கள் 19-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ள ஒரு நிகழ்வினை அப். பவுல் மேற்கோள் காட்டுகிறார். இஸ்ரவேலின் அரசனாகிய ஆகாப், தீர்க்கன் எலியாவோடுள்ள தீர்க்கதரிசிகள் அனைவரையும் கொன்று போட்ட செய்தியறிந்து, தான் இனியும் வாழ விரும்பாமல் சாகவேண்டும் என நினைத்து, தன் உயிரை எடுத்துக்கொள்ளக் கடவுளிடம் மன்றாடும் போது, கடவுள் தந்த பதிலே அந்நிகழ்வு (1 இராஜா. 19:10-18).

பல தீர்க்கர்கள் அழிக்கப்பட்ட போதிலும், எலியாவைத் தெரிந்தெடுத்துக் காப்பாற்றிய செயலும், பல்லாயிரம் இஸ்ரவேலர் கடவுளின் உடன்படிக்கையைத் தள்ளி, பலிபீடங்களை இடித்து, தீர்க்கர்களைக் கொன்று, மனக்கடினமாய் வாழ்ந்தபோதிலும், கர்த்தருக்காக பரிசுத்தமாக வாழுகின்ற 7000 பேரை தெரிந்து கொண்டு, காப்பாற்றியக் கடவுளின் செயல்பாடும் அவருடைய அளவில்லாக் கிருபையை வெளிப்படுத்துகிறது. பிரியமானவர்களே! நமது சொல்லும், செயலும் கடவுளின் பார்வையில்

தகுதியற்றவர்களாய் நம்மை அடையாளம் காட்டிய போதிலும், தம் விலையேறப்பெற்ற கிருபையினால் நம்மைப் பிள்ளைகளாகத் தெரிந்துகொண்டு, காக்கின்ற கடவுளின் கிருபை பெரியது என்பதை அறிந்துகொள்வோமாக.

## 2. கடவுளின் இணைக்கும் தன்மை (The grafting of God )

“இஸ்ரவேலருடைய தவறுதலினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்புக் கிடைத்தது” என ரோமர் 11:11-ல் எழுதும் அப். பவுல், இஸ்ரவேலர் கிறிஸ்து இயேசுவின் வழியாக இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள மறுத்ததால், கடவுள் பிற இனத்தவர் பக்கமாய் திரும்பினார். அவர்களை இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி அழைத்து, ஆயத்தப்படுத்தினார். அவர்களும் இரட்சிக்கப்பட்டனர். இவ்வுண்மையை ‘ஒலிவமரங்கள்’ ஒப்பீடு வழியாகப் பவுல் விவரிக்கிறார். நல்ல ஒலிவமரத்தின் கிளைகள் (இஸ்ரவேலர்) சில தறிக்கப்பட்டு, அந்த ஒலிவ மரத்தில் காட்டொலிவ மரக்கிளை (பிற இனத்தவர்) ஒன்று ஒட்டப்பட்டால் அது மரத்தின் செழுமையான வேரிலிருந்து ஊட்டம் பெற்று வளர்ந்து பலன் தருகிறது. இஸ்ரவேலரைப் பொறுத்தமட்டில், கடவுள் மீது முழுமையாக நம்பிக்கைக்கொண்டு மனம் மாறினால் மறுபடியும் ஒட்டப்படுவார்கள். அவர்களைத் திரும்பவும் இணைப்பதற்கு கடவுள் வல்லமை நிறைந்தவர் என்று பவுலடியார் உறுதியுடன் உரைக்கிறார். அன்பர்களே! அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்” என்ற யோவான் 1:11,12-ஐ நினைவில் கொள்வோமாக.

## 3. கடவுளின் உத்தரவாதம் (The guarantee of God)

ரோமர் 11:25 முதல் தொடரும் வசனங்களிலே இஸ்ரவேலருக்கும், பிறஇனத்தவருக்கும் கடவுள் தருகின்ற உத்தரவாதத்தினை பவுல் விளக்குகிறார். இஸ்ரவேலரின் மனக்கடினத்தால் பிறஇனத்தவருக்கு இரட்சிப்புக் கிடைத்தது. அதனால் தங்கள் தவறை உணர்ந்து, மனம் வருந்தி, கடவுள் பக்கமாய் திரும்பி இஸ்ரவேலரும் இரட்சிக்கப்படுவார்கள். கடவுள் முற்பிதாக்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களையும், தன் பிள்ளைகளின் வாழ்வு சார்ந்த திட்டங்களையும் மறப்பதேயில்லை. எல்லோர் மேலும் இரக்கமாயிருக்கும் கடவுள் இத்தகைய உத்தரவாதத்தை ரோமர் 11:30,31-ன்படி உறுதி செய்கிறார். அன்பிற்கினியவர்களே! கடவுளுடைய அழைப்பும், அவரது ஆசீர்வாதங்களும் மாறாதவைகள் என்பதை உணர்ந்து கொள்வோமாக. கடவுளின் திட்டத்தில் பங்கேற்று இறையாசி பெற நம்மனைவருக்கும் உதவி செய்வாராக. ஆமென்.

இறைப்பணியில் உங்களுடன்,
அருட்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்.

# உதவி ஆயரம்மா மடல்

எல்லா சூழல்களிலும் உடனிருந்து நம்மை வழிநடத்துகின்ற நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் அன்புகலந்த வணக்கம்.

## பாடல் சொல்லும் வரலாறு

### "காரிருளில் என் நேச தீபமே"

### (Lead kindly light)

19-ஆம் நூற்றாண்டின் சிறந்த நற்செய்திப் பணியாளர்களில் ஒருவராகக் கருதப்படும் ஜான் ஹென்றி நியூமன், லண்டன் பட்டணத்தில் 21.02.1801-இல் பிறந்தார். தந்தையின் பெயர் ஜான் நியூமன். தாயின் பெயர் ஜெமிமா போர்டினியர். இவர்களுக்குப் பிறந்த ஆறு பிள்ளைகளில் நியூமன் மூத்தவர். சிறுவனாக இருக்கும் போதே புத்திக் கூர்மையுள்ளவராகக் காணப்பட்ட நியூமன், திருமறை வாசிப்பதிலும், திருச்சபை வரலாறுகளை ஆவலோடு கற்பதிலும் உற்சாகம் காட்டி வந்தார்.

1808-ஆம் ஆண்டு ஈலிங்கிலுள்ள பள்ளிக்கூடமொன்றில் சேர்ந்த இவர், சுமார் இரண்டு ஆண்டுகளிலேயே ஆங்கில மொழியில் கவிதை இயற்றுவதிலும், உரைநடை எழுதுவதிலும், சிறந்து விளங்கினார். 1816-ஆம் ஆண்டு ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் இணைந்து, இலத்தீன் மொழியிலும், கணிதத்திலும் முதல் வகுப்பில் தேறினார். அதே பல்கலைக் கழகத்தில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் 1828-ஆம் ஆண்டு சபையின் குருவாக நியமிக்கப்பட்டார். இயேசு கிறிஸ்துவின் பெயரில் விசுவாசமில்லாமல் வாழ்க்கையை கிறிஸ்தவர்கள் நடத்தி வருவதைக் குறித்து நியூமன் மனம் வருந்தினார். கிறிஸ்தவத் திருச்சபைகள் புத்துயிர் பெற்று வளர ஆவன செய்ய வேண்டுமென்று பெரிதும் விரும்பினார். அதற்குத் தமக்கு வழிகாட்டிநடத்த வேண்டுமென்று அவர் கடவுளிடம் ஊக்கமாய் மன்றாடி ஜெபித்து வந்தார்.

குரவானவராகப் பணியாற்றும்போது நண்பரான ஹால்ஃபோர்டு என்பவரின் அழைப்பின் பேரில் அவர்களுடன் இத்தாலியா நாட்டிற்குச் சென்றார். சில நாட்கள் மட்டுமே அவர்களுடன் செலவிட்ட நியூமன், அவர்களை விட்டுப் பிரிந்து, சிசிதி தீவிற்குச் சென்று அங்கு திருப்பணி செய்யும்போது நோய்வாய்ப்பட்டார். உடல்நலம் தேறியவுடன் கப்பலேறி மார்சேயில்ஸ் என்னுமிடத்திற்குச் சென்று, அங்கிருந்து இங்கிலாந்து செல்ல முயற்சித்தார். மார்சேயில்ஸ் செல்லும் கப்பல் அவருக்குக் கிடைக்காததால் பல்மேரோ (Palmero) என்னுமிடத்தில் 3 வாரங்கள் தங்கியிருந்தார். ஆரஞ்சு பழங்களை ஏற்றிச் செல்லும் கப்பலொன்று மார்சேயில்ஸ்க்கு செல்வதாக அறிந்து அதில் ஏறினார். போனிஃபேசியா நீர்ச்சந்தியில் (Strait of Bonifacio) அக்கப்பல் ஒருவாரம் தங்க நேரிட்டது.

இங்கிலாந்திற்குச் சென்று தம்முடைய நெருங்கிய நண்பர்களைப் பார்க்க வேண்டுமென்றும், அங்குள்ளக் கிறிஸ்தவ மக்களைத் தட்டியெழுப்பி, அவர்களுக்கு கொடுக்கும் பணியில் ஈடுபட வேண்டுமென்றும் அவரது உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், தனது பயணம் தாமதமாகிக் கொண்டிருப்பதைக் கண்டு தவித்துப்போன அவர், தாம் இருள் சூழ்ந்த நிலையில் இருப்பதாகக் கருதி, தமக்கு வழிகாட்ட வேண்டுமென்று கடவுளை நோக்கி ஜெபித்தார். அப்பொழுதுதான் "காரிருளில் என் நேச தீபமே...."என்று ஆரம்பிக்கும் பாடல் அவரது உள்ளத்தில் உதயமாயிற்று.

இப்பாடலுக்கு நியூமன் அளித்தத் தலைப்பு "மேகஸ்தம்பம்" என்பதே. இஸ்ரவேல் மக்களைக் கடவுள் இரவில் தீபஸ்தம்பத்தைக் கொண்டும், பகலில் மேகஸ்தம்பத்தைக் கொண்டும் வழிநடத்தினதைத் தம் மனதில் நினைவுபடுத்தி, இருள் சூழ்ந்த இவ்வுலகத்தில் ஒரு நேச தீபமாகத் தம்மை வழிநடத்தும்படி கடவுளை வேண்டிக்கொண்டப் பிரார்த்தனையே இப்பாடல். இப்பாடலின் முதல் சரணம், நியூமன் பயணம் செய்தக் கப்பல் முன்னேற முடியாமல் தவிக்கும் நிலையை எடுத்துக்காட்டுகிறது. இரண்டாம் சரணம், நியூமனின் இளவயது அனுபவத்தைச் சித்திகரிக்கிறது. இறுதி இரண்டு வரிகள் தனக்கு அருமையான நண்பர்களை விட்டுத் தவிக்கும் அவல நிலையைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. இப்பாடலுக்கு, டாக்டர் ஜான் வக்கஸ் டைக்ஸ் என்ற இங்கிலாந்து திருச்சபைப் போதகர், 1867-ஆம் ஆண்டு "லக்ஸ் பெனிக்னா" என்ற இராகத்தை அமைத்தார். 1890-ஆம் ஆண்டு ஆகஸ்டு 11-ஆம் நாள் பர்மிங்ஹாம் நகரில், தமது 90-ஆவது வயதில் நியூமனின் உலக வாழ்வு நிறைவு பெற்றது.

உங்களுக்காக ஜெபிக்கும்,<br>திருமதி. செலின் சாமுவேல்,<br>உதவி ஆயரம்மா.

**HARVEST FESTIVAL**
**WEEKLY FOOD SALES**

| Date | Sponsoring group |
|---|---|
| 02-10-2015 | Bur Dubai Prayercell |
| 09-10-2015 | RAK Harvest Festival |
| 16-10-2015 | Sharjah - B & D Prayercells |
| 23-10-2015 | Qusais - A Prayercell |
| 30-10-2015 | Junior Church |
| 06-11-2015 | Sharjah - C Prayercell |
| 13-11-2015 | Sharjah - A Prayercell |
| **20-11-2015** | **Harvest Festival - Dubai** |

# செயலர் மடல்

தம் பெரிதான கிருபையால் மீண்டும் ஒரு புதிய மாதத்திற்குள் நுழையச் செய்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

வேத ஆராய்ச்சி வகுப்புகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இன்னும் இதில் பங்கு பெறாத சபைமக்களும் கலந்துகொண்டு பயன்பெறும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். Rev.J.Stephen ஐயரின் மருத்துவச் செலவுக்காக சபைமக்கள் உற்சாகமாகக் கொடுத்தீர்கள். மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சபையின் சார்பாக ரூபாய் 2 லட்சம் மற்றும் காணிக்கை மூலமாகவும் சேர்த்து ரூபாய் 5 லட்சம் அனுப்ப ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது.

18-09-2015 அன்று வருடாந்திர Memory Verse Contest சிறப்பாக நடைபெற்றது. இதில் உற்சாகத்துடனும், பயிற்சியுடனும் கலந்துகொண்ட நமது சபையின் பிள்ளைகளுக்கும், ஊக்கப்படுத்திய பெற்றோருக்கும் நன்றி. Weekly Food Sales கர்த்தரின் கிருபையால் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. கலந்துகொண்ட குழுவினர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். இனிவரும் ஒவ்வொரு வாரங்களிலும் சபைமக்கள் ஒவ்வொரு Prayer Cell-ல் தங்களை இணைத்துக்கொண்டு பொருட்களை வைக்கவும், அதை வாங்கி மறைமுகமாக சபை ஊழியங்களை தாங்கவும் அன்புடன் கேட்கிறேன்.

2015 Convention Speaker Dr.புஷ்பராஜ் அவர்கள் இறைசெய்தி கொடுத்து நம்மை ஆவிக்குரிய வளர்ச்சியில் நடத்துவார்கள். சபைமக்கள் அனைவரும் ஜெபத்துடன் கலந்துகொண்டு இறையாசி பெற்றுக் கொள்ளுங்கள். நமது சபையின் பொருளாளர் திரு.N.David அவர்கள் கடந்த இரண்டே கால் வருடங்களாக பல்வேறு ஊழியங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு நம் சபையின் நலனுக்காக உழைத்தார்கள். தற்போது குடும்ப சூழ்நிலையின் காரணமாக தாய்நாட்டுக்குச் செல்ல இருக்கிறார்கள். அவர்களின் சிறப்பான சேவைக்காக நன்றி செலுத்துகிறேன்.

25-09-2015 அன்று சபைக்கமிட்டி கூடி புதிய செயற்குழு உறுப்பினராக Mr.Julian மற்றும் புதிய பொருளாளராக Mr.Andrus அவர்களையும் தேர்வு செய்துள்ளோம். அவர்களை உங்கள் ஜெபங்களில் தாங்கிக் கொள்ளுங்கள்.

சிங் ரெத்னம், செயலர்.

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்

## ஸ்தோத்திரப் பண்டிகை 2015

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 3:10

நாள் : வெள்ளிக்கிழமை 20-11-2015
இடம் : பரிசுத்த திருத்துவ ஆலய வளாகம்
நேரம் : காலை 7.30 மணி முதல் நண்பகல் 1.30 மணி வரை

## நிகழ்வு முறைமை

| | | |
|---|---|---|
| காலை | 07.30 மணி | : ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை |
| காலை | 08.30 மணி | : ஸ்டால்கள் திறப்பு விழா, விற்பனை |
| காலை | 10.00 மணி | : ஏல விற்பனை |
| நண்பகல் | 01.30 மணி | : ஸ்தோத்திரப் பண்டிகை நிறைவு ஜெபம்,ஆசீர்வாதம் |

உணவு ஸ்டால்கள்: காலை சிற்றுண்டி, இனிப்பு, காரங்கள், காப்பி, தேனீர், குளிர்பான ஸ்டால்கள், பிரியாணி மற்றும் இதர ஸ்டால்கள்.

**ஊக்கமாய் ஜெபியுங்கள்!**
**மனப்பூர்வமாய் காணிக்கை கொடுங்கள்!!**
**உற்சாகமாய் பங்கு பெறுங்கள்!!!**

**கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!**

# ஆலோசனை சங்கமும் ஆலோசியாத கேள்வியும்

உங்களால் சிலுவையில்
அறையுண்டு மரித்தவரும்
உங்களால் அறியாமல்
தேவனால் உயிர்த்தவரும்

நசரேய னாகிய
கிறிஸ்த்து இயேசுவின்
விசுவாச நாமத்தினால்
இவன்,சுக மாக்கப்பட்டான்

எரிச்சல் கேள்விக்குத்
துணிச்சல் பதிலை
அறிவித்த பேதுரு
நிறைந்த தேவாவியில்

நின்றது ஆலோசனை
சங்கத்தில், எருசலேம்
அன்று கொதிப்பில்
பேதுரு யோவான்மேல்

இயேசுவின் நாமத்தில்
முடமானவன் நடக்கலானான்
இயேசுவைக் கொன்றவர்கள்
மனதால் முடக்கலானார்

மாலை நிகழ்வுக்கு
இரவே சிறைத்தண்டணை
காலை விசாரணை
பேதுருவாய் தேவபதில்

பதிலுக்குப் பதிலில்லை
பகலில் நடந்தது
பொதுமக்கள் பார்த்தது
நகரே அறிந்தது

மக்கள் பேசவில்லை
அதிகாரி பேசவில்லை
தக்கபதில் முப்பரும்
வேதபாரகரும் பேசவில்லை

நடுவில் நிறுத்தி
தொடுத்த கேள்விக்கணை
முடிவுக்கு வந்தது
ஆசாரியர் அதிர்ந்தார் !

ஆதாரம் :
அப்போஸ்தலர் 4:5-21.
கவிதை எண் : 180.
கவிதை ஆக்கம் : மணிமுத்து.

## வாழ்த்துகிறோம்

"இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"

கர்த்தருடைய கிருபையால் ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.P.Samuel Subi & Mrs. Anto Lurthu Jeswini
இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# நீங்கள் கிறிஸ்தவரா...

தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான், வந்ததுபோலவே நிர்வாணியாய்த் திரும்பப்போவான், அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக்கொண்டு போவதில்லை. பிரசங்கி 5:15

தரணியில்
தாம்பத்ய உறவில்
தாய்வழி
வரும்
ஜனனம் - ஒரு
அதிசயம்.
இதன் ரகசியம்
கர்த்தரே
அறிவார்.
காரணம்
“கர்ப்பத்தின்
கனி கர்த்தரால்
வந்தது”
பிறந்த மேனியாய்
வந்தோமே
திறந்த புத்தகமாய்
வாழ்வோமே.
சிறந்தவனாய்
திகழ்வோமே.
உலகத்திலே நாம்
ஒன்றும் கொண்டு
வந்ததுமில்லை, நாம்
ஒன்றும் கொண்டு
போவதுமில்லை,
என்பது
நிச்சயம்.
1 தீமோத்தேயு 6:7
கொண்டு வந்தது
என்னப்பா
கூடவருவது
ஏதப்பா
கூட்டி வைப்பது
எதற்கப்பா
கொடுத்து மகிழ்வது
தானப்பா

மேதினியில்
புகழப்பா
பணம் பணமென
ஓடியோடி அலைவது
ஏனப்பா
ஆசைக்கும் ஒரு
அளவு வேண்டுமப்பா
காண்பது யாவும்
மாயையப்பா
போகும் காலம் ஒரு
நாள் வருமப்பா
எல்லாமே
விட்டுவிட்டு
செல்வோமப்பா
கைக்கு எட்டியது என
கொண்டுபோக
இயலாதப்பா.
எது கிடைத்ததோ
அது கர்த்தரின்
கிருபையப்பா.
கிடைத்ததில்
சந்தோஷம்
கொள்ளப்பா
கட்டளை
இட்டது யாரப்பா
நம்மைப் படைத்த
கர்த்தரப்பா.
அவரை பற்றற
பற்றப்பா
பயணம் எளிதப்பா
கர்த்தருக்குப் பயந்து
வாழ்வோமா
வரவும்
செலவும்
வாழ்வின் முறை

அன்பும்
அறமும்
மனிதரின்
நிறை
குறைவிலா
மனமும்
வேண்டும்
குறைபடா
கரமும்
வேண்டும்
இறைப்பணியில்
இணைந்திட
வேண்டும்.
திருமறை
கூறும் வழி
நடந்திட
வேண்டும்.
இவையே
லட்சியமெனில்
நிச்சயம்
ஜெகத்தினை
ஜெயித்திடலாம்.
கர்த்தரின்
பரம் பற்றிடலாம்
பொய்யுடம்பு
போனபின்
புகழுடம்புடன்
புவியில்
நிலைத்திடலாம்.
நிர்வாணியாய்
வந்தோமே,
நிர்வாணியாய்
திரும்பிப்
போவோமே.
நினைவில்கொள்வோமே!

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# விழித்திரு

சீக்கிய மார்க்கத்தைச் சேர்ந்தவரான சாது சுந்தர்சிங், சிலுவையில் அறையுண்ட இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை திபெத் நாட்டிற்கும், இன்னும் ஆண்டவரைப் பற்றிக் கேள்விப்பட்டிராத இடங்களுக்கும் எடுத்துச் செல்வதற்காக தனக்குக் கிடைத்த தெய்வீக அழைப்பை முழுவதும் நம்பி அதைச் செயல்படுத்தினவர். இமயமலைப் பகுதிகளில் உள்ள கணவாய் வழியாகப் பிரயாணம் பண்ணுவது என்றாலும் அவர் எப்போதுமே வெறுங்கால்களோடு தான் தன் பிரயாணத்தை மேற்கொண்டார். ஆனபடியினால், கற்கள், பனிக்கட்டிகள் போன்றவற்றினால் அவர் கால்கள் கிழிக்கப்பட்டு, இரத்தம் கசிந்து கொண்டே இருக்கும். ஆகவே இவர், "இரத்தம் கசியும் கால்களை உடைய அப்போஸ்தலன்" என்று அழைக்கப்படுகிறார். ஒருமுறை ஹிமாலய பர்வதத்தின் கைலாச கிரியை நோக்கி ஏறக்குறைய ஆறு மைல் தூரத்துக்கு அழகிய நறுமலர் நிறைந்த வயல் வழியாக செல்கையில், அந்த சுகந்த வாசனையை முகர்ந்து ஆனந்தித்து கொஞ்ச நேரம் நித்திரை கொண்டார். அப்போது அவ்வழியாக வந்த வழிப்போக்கன் ஒருவன் அவரை எழுப்பி, இங்கே தூங்கிய ஒருவனும் உயிரோடே திரும்பிப் போனதில்லை. இப்பூக்களின் வாசனை மனுஷனைத் தூங்கிக்கொண்டே இருக்கச் செய்யும். பசி எடுத்த போதிலும், தூக்கத்தை விட அவனுக்கு மனம் வராது. இவ்வாறு ஆகாரமின்றி தேகம் பலவீனம் அடைந்து அவன் மரிப்பான் என்றான். இதற்குத் தப்புவதற்கு அவன் வேறொரு மூலிகையை கொடுத்து, அதை முகர்ந்து கொண்டே நடந்தால், தூக்கம் வராது என்றான். இவ்வாறு பூவினால் உண்டான மோசத்தை அந்த மூலிகை தடுத்தது. இவ்வுலகத்திலும் நம்மைக் கொல்லும் பல நல்ல விஷயங்களுண்டு. இவைகள் மனிதனை நிர்விசாரமாக்கி அவனுடைய ஆத்தும பசி தாகத்தைக் குறித்து அஜாக்கிரதையாகச் செய்கின்றன. ஆகையால் பாவமான விஷயங்களைக் குறித்து மாத்திரமல்ல, நம்மை கொல்லும் பல நல்ல விஷயங்களான வாசனைக்கும் தப்பிப்பிழைக்க ஒரு வழியுண்டு. ஜெபமாகிய மூலிகையை முகர்ந்து கொண்டே வழிநடப்போம், அப்போது இவற்றால் நமக்குத் தீங்கொன்றும் இல்லை என சாது சுந்தர்சிங் தனது அருளுரையில் கூறினார். "பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்." மத்தேயு 26:40,41

ஆம், நம்மைக் கீழே இடறி விழ செய்யும் சோதனைகளை, நாம் ஜெபிக்கும்போது ஜெயிக்கக் கூடியவர்களாயிருக்கிறோம். ஒவ்வொரு சோதனையையும் மேற்கொள்ளும் போது ஒரு படி ஏறி, உலகத்துக்குத் தூரமாகவும் பரலோகத்துக்குச் சமீபமாகவும் போக அவை நமக்குதவுகிறது. ஆதலால், தேவ இலக்கை நோக்கிய பயணத்தில் நாம் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபிக்கக் கடவோம்.

விழித்திரு என்றவர் வரப்போகிறார், ஜெபத்துடன் நீயும் ஆயத்தமா?
நினையாத நேரம் வருவார், நீயும் விழிப்புடன் ஆயத்தமா?
உன் தேவனை சந்திக்க ஆயத்தமா?
உன் இயேசுவை சந்திக்க ஆயத்தமா?

இனிதா மோசஸ்

# வேதத்தில் பூக்கள்

ஆதியிலே ஆவியானவர் அசைவாடியது நீர்ப்பரப்பு
தேவன் பூமியை நோக்கிப் பார்த்தார் பிரமிப்பு
ஒழுங்கின்றி வெறுமையாய் இருந்தது பூமி பரப்பு
ஆறு நாட்களில் சோர்வின்றி படைத்தார் சர்வ சிருஷ்டிப்பு
நோக்கிப் பார்த்து நல்லதென்று கண்டார் மனதில் பூரிப்பு
ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் ஓய்வுநாள் அனுசரிப்பு
இவர் கைப்படைப்பாம் ஜனங்கள் வாழ்ந்த வாழ்க்கை அருவருப்பு
கெட்ட நடத்தையால் தேவகோபம் எழ வந்தது சர்வலோக அழிப்பு
ஒரு நீதிமானால் தொடரப்பட்டது மனுஷகுலத்தின் தழைப்பு
மீண்டும் விழ தீர்க்கன் வழி வந்தது தேவ வார்த்தையின் எச்சரிப்பு
நன்றிகெட்ட மனுக்குலத்தின் பதிலோ நிராகரிப்பு
மனுக்குலத்தை இரட்சிக்க கொடுக்கப்பட்ட பிதாவின் வாக்களிப்பு
கன்னி வயிற்றில் இமானுவேலரின் பிறப்பு
பூமிவந்த மனுஷகுமாரனின் பிறப்பால் பரலோகத்தில் அக்களிப்பு
தேவதூதர் கண்ட மேய்ப்பர் மத்தியில் சலசலப்பு
நட்சத்திரம் வழி நடந்த சாஸ்திரிகள் விரைந்து வந்தளித்தனர் பரிசளிப்பு
செய்தி கேட்ட ஏரோதும் எருசலேமின் நகரத்தாரும் கொண்டனர் பரபரப்பு

30வருட உலக வாழ்வு பெற்றோருக்காய் கடின உழைப்பு
மீதிநாட்கள் சீரழிந்த மனுக்குலத்திற்கான அங்கலாய்ப்பு
தேடி நடந்து பிணி நீக்கி கொடுத்தார் அரவணைப்பு
பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது மனம் திரும்பு
இப்பூலோக இன்பம் விடவில்லையெனில் அழுகை, அக்கினி, பற்கடிப்பு
கண்டித்து உணர்த்தியதால் இயேசுவுக்கு மரணத்தீர்ப்பு
குற்றமில்லா இரத்தத்தைக் காட்டிக் கொடுத்ததால் 30 காசுகள் அன்பளிப்பு
கெத்சமனேயில் அருள்நாதரின் இரத்தத்துளிகளாய் வியர்ப்பு
முள்முடி சூட்டி சிவப்பங்கி தரித்து சேவகரின் பரிகசிப்பு
பாரச்சிலுவை சுமந்து மலையேறியதால் சரீர களைப்பு
கொல்கொதாவில் மூன்றாணிகளில் தொங்குதோ தேவஅன்பு
கடைசி சொட்டு இரத்தத்தையும் சிந்தி மனுக்குல இரட்சிப்பு
இவர் மரணத்தால் சத்துருவின் தலைநசுங்க சாத்தானின் தோற்கடிப்பு
மரணத்தை வென்று மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த ஆர்ப்பரிப்பு
சித்தம் கலங்கி நின்ற சீஷர்களுக்கு பிரசன்னமாகி தந்தார் ஆனந்த களிப்பு
கைவிடேன், திரும்பவருவேன், கூட்டிச்செல்வேன் என்ற வாக்களிப்பு
வாக்களித்தவர் திரும்பவருவார் நடுவானில் தேவதூதன் எக்காளதொனிப்பு
வெள்ளாட்டையும் செம்மறியாடுகளையும் பிரித்துச் செய்வார் நியாய தீர்ப்பு
ஐயகோ! காலம் செல்லுதே இரட்சிக்கப்படாத ஜனத்திற்காக
தேவ ஜனமே நீ புலம்பு.

புனிதா தாஸ்.

## வேத வகுப்பு ஆராய்ச்சி

முதல் மற்றும் மூன்றாம் வாரம் புதன்கிழமை தோறும்
இரவு 8:00 மணி முதல் 9:15 மணி வரை
வேத வகுப்பு ஆராய்ச்சி போதகர் இல்லத்தில்
வைத்து நடைபெறும்

## ஆங்கில ஆராதனை

முதல் மற்றும் மூன்றாம் வாரம் வெள்ளிக்கிழமை தோறும்
காலை 6:00 மணி முதல் 7:15 மணி வரை
திருவிருந்து ஆராதனை
ஆங்கிலத்தில் நடைபெறும்.

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப பாடல் : பாமாலை 9 எல்லாருக்கும் மா

ஆராதனை இறுதி பாடல் : பாமாலை 204 கவி 2 கர்த்தரே தற்காரும்

### 02-10-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 5 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை | 124 | நீர் திவ்ய வழி இயேசுவே |
| கீர்த்தனை | 174 | தாசரே இத்தரணியை அன்பாய் |
| கீர்த்தனை | 181 | பொக்கிஷம் சேர்த்திடுங்கள் |
| கீர்த்தனை | 182 | வீராதி வீரர் யேசு சேனை |

### 09-10-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 6 | உன்னத ஆழம் எங்கேயும் |
| பாமாலை | 140 | ஆராய்ந்து பாரும் கர்த்தரே |
| பாமாலை | 128 | ஆண்டவா பிரசன்னமாகி |
| கீர்த்தனை | 151 | யேசுவே கிருபாசனபதியே |
| கீர்த்தனை | 154 | நெஞ்சமே தள்ளாடி நொந்து |
| கீர்த்தனை | 125 | தேவபிதா எந்தன் |

### 16-10-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 194 | அருள் ஏராளமாய் பெய்யும் |
| பாமாலை | 180 | பிதாவே எங்களைக் கல்வாரியில் |
| கீர்த்தனை | 172 | சுந்தரப் பரம தேவ |
| கீர்த்தனை | 173 | தந்தானைத் துதிப்போமே |
| கீர்த்தனை | 56 | இயேசுவின் நாமமே திருநாமம் |

### 23-10-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 16 | போற்றும் போற்றும் |
| பாமாலை | 45 | யாரை நான் புகழுவேன் |
| கீர்த்தனை | 169 | எங்கும் புகழ் இயேசு |
| கீர்த்தனை | 87 | சத்திய வேதத்தை தினம் |
| கீர்த்தனை | 92 | உன்றன் சுயமதியே |

### 30-10-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 196 | இயேசு கற்பித்தார் |
| பாமாலை | 192 | பாலரே ஓர் நேசர் உண்டு |
| கீர்த்தனை | 175 | பயந்து கர்த்தரின் |
| கீர்த்தனை | 168 | நித்தம் முயல் மனமே |
| கீர்த்தனை | 126 | நம்பி வந்தேன் மேசையா |

# திருச்சபை ஜெபநாள் 03-10-2015 (முதல் சனிக்கிழமை)

"கர்த்தாவே, என் கூப்பிடுதல் உமது சந்நிதியில் வருவதாக, உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும்." சங்கீதம் 119:169

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் சனிக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய மாதத்தைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- சிறுவர்களுக்கான Memory verse contest ஆசீர்வாதமாக நடந்தேற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக,
- மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனைக்கு அர்ப்பணமுள்ள செவிலியர் கிடைக்க ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

